நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்

## DVC. No. 1 of 2024

## P.W.2–ன் வாக்குமூலம்

**(மனுதாரர் தரப்பு சாட்சி)**

............

| | | |
|---|---|---|
| பெயர் | : | சித்தையன் |
| தந்தை / கணவர் பெயர் | : | கருங்கண்ணன் |
| கிராமம் | : | |
| வட்டம் | : | |
| மாவட்டம் | : | |
| சாட்சி வரிசை எண் | : | PW2 |
| வயது | : | |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று* ***2025–ஆம் வருடம், ஜுன் மாதம், 19–ம்ஆம் தேதி*** *பதிவு செய்யப்பட்டது.*

**எதிர ்மனுதாரர் ஆஜர் அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**குறுக்கு விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 3.50 p.m. )

1. நான் செங்கல் சூளை வைத்திருக்கவில்லை. நான் செங்கல் சூலையும் வைத்திருந்தேன், மர வியாபாரமும் செய்து வந்தேன், தறி தொழிலும் செய்து வந்தேன் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் வேண்டுமென்று கூலித்தொழில் செய்வதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னை

மிகவும் வயதானவர் என்று நான் சொல்வதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றால் சரியல்ல. எனக்கு உண்மையில் 47 வயது ஆகவில்லை என்றால் சரியில்லை. எனது பிரமாண பத்திரிக்கையில் எனக்கு 47 வயதாகிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. எனது மனைவியும் வீட்டில் நான்கு தறி போட்டு ஆட்கள் வைத்து வேலை வாங்கி வருகிறார் என்றால் சரியல்ல. எந்த தறியும் என்னிடம் இல்லை. என் மனைவி குழந்தைகளை தான் பார்த்துக் கொண்டிருக்கிறார். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரத்தில் எனக்குத் தெரிந்த விபரங்களை தான் குறிப்பிட்டுள்ளேன். எனது மகளை அடித்ததாகவும் உதைத்ததாகவும் கொடுமைப்படுத்தியதாகவும் பிரமாண பத்திரத்தில் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். நான் அதை நேரில் பார்க்கவில்லை என்றால் சரியல்ல, நான் எனது சித்தப்பா தகவல் சொல்லி அங்கு போகும் போது எனது மகளை அடித்து வெளியே இழுத்து வந்தார்கள் நான் பார்த்தேன். என் மகள் 7 மாத கர்ப்பமாக இருக்கும் போது மேற்கண்டவாறு இழுத்து வந்து வெளியே விட்டார்கள். நான் அவ்வாறு பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த பிரமான பத்திரத்தில் நான் அவ்வாறு சொல்லவில்லை என்றால் நான் தாக்கல் செய்த வாக்குமூலத்தில் என்ன டைப் செய்து இருக்கிறார்கள் என்று எனக்கு சரியாக தெரியவில்லை. ஆனால் நான் பார்த்தேன்.

3. நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் இல்லாத கதைகளை இட்டுக்கட்டி கூறிவிட்டு தற்போது மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 15 பவுன் நகை கேட்டு அடித்து கொடுமை செய்ததாக எனது பிரமாண பத்திரத்தில் கூறியுள்ளதன் பேரில் நானோ, எனது மகளோ காவல் துறையில் புகார் அளிக்கவில்லை என்றால் நான் கொடுக்கவில்லை எனது மருமகன் வேறு கல்யாணம் பண்ணிக் கொண்டார் என்று தான் புகார் கொடுத்தேன். குழந்தை பிறந்து மூன்று மாதத்தில் புகார் கொடுத்தேன் என்ன தேதியில் கொடுத்தேன் என்று எனக்கு ஞாபகம் இல்லை. தேதி மாதம் வருடம் எனக்கு தெரியாது நான் படிக்கவில்லை. நான் தனிப்பட்ட முறையில் எந்த காலத்திலும் எந்த புகார் நான் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

4. எனது மகளுக்கு இரண்டு நாட்களில் திருமணம் பேசி அவ்வளவு விரைவாக திருமணம் செய்ய வேண்டிய அவசியம் என்னவென்றால் அவர்களைத்தான் கேட்க வேண்டும் அவசரமாக வந்து பெண் கேட்டார்கள். விரைவாக திருமணம் செய்ய வேண்டும் என்று நான் சொன்னதன் அடிப்படையில் தான் திருமணம் வைத்தார்கள் என்றால் சரியல்ல. என் பெண்ணுக்கு எதிர்மனுதாரரை திருமணம் செய்து கொள்ள விருப்பம் இல்லை என்றாலும் நான் தான் கட்டாயப்படுத்தி திருமணம் செய்து வைத்தேன் என்றாலும் சரியல்ல.

5. எதிர்மனுதாரரிடம் எனது மகள் அவருடன் சேர்ந்து வாழ்ந்த காலத்தில் அவரை பிடிக்கவில்லை என்றும் அவரை பிடிக்காமல் திருமணம் செய்து வைத்து விட்டதாகவும் சொன்னார் என்றால் தெரியவில்லை. எனது மகளாக தான் சேர்ந்து வாழாமல் வந்துவிட்டார் என்றாலும் அவர்கள் யாரும் விலக்கி வைக்கவில்லை என்றாலும் சரியல்ல. பின்னிட்டு எதிர்மனுதாரர் குடும்பத்தார் பலமுறை வந்து வாழ அழைத்தும் என் மகள் வரவில்லை என்றால் சரியல்ல. யாரும் அவ்வாறு என்னிடம் வந்து பேசவில்லை. நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் ஒரு முறை அவ்வாறு வந்து அழைத்தபோது எதிர்மனுதாரரை எங்களது குடும்பத்தார் அடித்து விட்டார்கள் என்றாலும் சரியல்ல நாங்கள் அடிக்கவில்லை.

6. வாழ விருப்பம் இல்லாமல் வந்த பெண்ணை இத்தனை நாள் வீட்டில் வைத்துக் கொண்டு தற்போது எதிர்மனுதாரர்கள் மீது பொய்யான புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. எனது பெண்ணுக்கு குழந்தை பிறந்ததை அறிந்து எதிர்மனுதாரர் வந்த பொழுது அவரை பார்க்க விடாமல் துரத்தி விட்டு விட்டேன் என்றால் சரியில்லை. என் மகள் சேர்ந்து வாழ வேண்டி நீதிமன்றத்தில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை இருவரும் சேர்ந்து வாழ வேண்டும் என்று தான் நான் போராடிக் கொண்டிருக்கிறேன்.

7. சேலம் சமூக நலத்துறை அலுவலகத்தில் 04.10.2023–ஆம் தேதி நடந்த விசாரணையில் எதிர்மனுதாரர் மனுதாரர் தன்னுடன் சேர்ந்து வாழ வந்தால் தன்னுடன் அழைத்துச் செல்வதாக எழுதிக் கொடுத்தார் என்றாலும் எனது மகள்

தான் சேர்ந்து வாழ வர மறுத்துவிட்டார் என்றாலும் சரியல்ல. அதனால் தான் இனிமேல் சேர்ந்து வாழ வாய்ப்பு இல்லை என்று சார்பு நீதிமன்றத்தில் விவாகரத்து கேட்டு எதிர் மனுதாரர் மனு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியில்லை. சேலம் நாங்கள் விசாரணைக்கு போயிருக்கும் போது தான் வீட்டிற்கு விவாகரத்து நோட்டீஸ் வந்துவிட்டது. விசாரணைக்கு மூன்றாவது நாள் போகும்போது மேற்படி நோட்டீஸ் வந்தது.

8. மேற்படி மனு மேட்டூர் சார்பு நீதிமன்றத்தில் 17.11.2023–ஆம் தேதியில் வாய்தா போடப்பட்டிருந்து அன்றைய தேதியில் விவாகரத்து பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் தான் வாய்தாவுக்கு எனது மகளை அழைத்துச் செல்லாமல் ஒருதலைப் பட்ச விவாகரத்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாய்தாவுக்கு முந்தைய நாள் எதிர்மனுதாரர் போன் செய்து எனது மகளையும் பேத்தியையும் அழைத்துச் செல்வதாகவும் வாய்தாவுக்கு வர வேண்டாம் என்று சொன்னதாலும் அதை நம்பி அந்த தேதியில் நாங்கள் வாய்தாவிற்கு வரவில்லை. மேற்படி வாய்தாவில் ஆஜராகாததற்கு எனது மகள் ஒரு காரணமும் நான் ஒரு காரணமும் மாற்றி மாற்றி வாக்குமூலத்தில் சொல்லிவிட்டு தற்போது புதியதாக ஒரு காரணம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

9. எதிர்மனுதாரரின் அம்மா வழி சொத்துகளை பறிப்பதற்காகவும் பணம் பெறுவதற்காகவும் அடுத்தடுத்த இது மாதிரியான நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம் என்றால் சரியல்ல. குழந்தைக்காக தான் வருகிறேன்.

10. எதிர்மனுதாரர் வருமானத்தை நிரூபிக்கும் பொருட்டு ஆவணங்கள் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் அந்த ஆவணங்கள் என்னிடம் இல்லை. நான் பொய்யாக எதிர்மனுதாரர் மாதம் ஒரு லட்சம் ரூபாய் சம்பாதிக்கிறார் என்று பிரமாண பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. என் மகள் தானாக பிரிந்து வந்து எதிர் மனுதாரர் அழைத்தும் வாழச்செல்லாத நிலையில் எதிர்மனுதாரர் மீது குற்றச்சாட்டுகள் கூறி இந்த மனுவை தாக்கல் செய்வது ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல.

11. எதிர்மனுதாரர் பல லட்சம் ரூபாய் செலவு செய்து திருமணம் செய்து கொண்டார் என்றாலும் அந்த தொகையை கடனாக வாங்கி இதுவரை வட்டி செலுத்தி வருகிறார் என்றாலும் சரி அல்ல நான்தான் மண்டபத்துக்கு செலவு செய்து திருமணம் செய்து வைத்தேன். கோவிலில் திருமணம் நடைபெற்று அதன் பிறகு எதிர்மனுதாரர் வீட்டில் வைத்து விருந்து நடந்தது அதன் பிறகு மண்டபத்தில் வைத்து வரவேற்பு நடந்தது. எதிர் மனுதாரர் வீட்டில் நடந்த விருந்துக்கும் மண்டபத்தில் நடந்த வரவேற்புக்கும் எதிர்மனுதாரர் தான் செலவு செய்தார் என்றால் சரியல்ல. நான் தான் செலவு செய்தேன். அவ்வளவு செலவு செய்து திருமணம் செய்தும் எனது மகள் விருப்பம் இல்லாமல் எதிர்மனுதாரர் வீட்டிலிருந்து வந்துவிட்டு இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

12. எனது மகள் அவராக வந்து விட்டதால் ஜீவனாம்சம் உள்ளிட்ட எந்த பரிகாரமும் கேட்க அவருக்கு அருகதை இல்லை என்றால் சரியல்ல. நானும் என் பெண்ணோ ஜீவனாம்சம் கேட்கவில்லை சேர்ந்து பிழைக்க தான் வந்துள்ளது. நான் பொய்யாக சொல்கிறேன் சரியல்ல. அ.வ. எண். 493/2023 என்ற எண்ணில் ஜீவனாம்சம் கேட்டும் எனது பேத்திக்கு எதிர்மனுதாரரின் அம்மா வழி சொத்தில் பங்கு கேட்டும் சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். நான் மேற்படி ஜீவனாம்சம் கேட்கவில்லை என்று சொல்லிவிட்டு ஜீவனாம்சம் கேட்டு தான் மேற்படி நடவடிக்கைகளை எடுத்து வருகிறேன் என்றால் குழந்தைக்காக தாக்கல் செய்துள்ளேன் இருவரையும் நான் எவ்வாறு பார்த்துக் கொள்வது. என் மகள் அவராக வாழாமல் வந்து விட்டதாலும் என் மகளையும் பேத்தியையும் பராமரிக்க எனக்கு போதுமான நிதி வசதி உள்ளதாலும் எனது மகளுக்கு எந்தவித ஜீவனாம்சமும் கோர அருகதை இல்லை என்றால் சரியில்லை.

13. பல்வேறு காலகட்டத்தில் எனது மகளை அடித்து விட்டதாகவும் உதைத்து விட்டதாகவும் செவிவழி செய்தியாக சொல்கிறேன் என்றாலும் அவ்வாறு எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும் சரியல்ல.

14. எல்லா காலகட்டத்திலும் அனைத்து இடங்களுக்கும் நீதிமன்றத்திற்கும் நான் தான் எனது மகளை அழைத்துச் செல்கிறேன் என்றால் சரிதான். எனது மகளுக்கு சரியான அறிவுரை கூறாமல் தேவையில்லாமல் பல்வேறு வழக்கு நடவடிக்கைகளை தவறான சங்கதிகள் உடன் தாக்கல் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரருக்கு தொல்லை கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் பொய் சங்கதிகளுடன் இது மாதிரியான நடவடிக்கைகளை எடுத்து வருகிறேன் என்றால் சரியல்ல.

15. இரண்டாவது திருமணம் செய்து கொண்டதற்கான ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை. ஓமலூர் மகளிர் காவல் நிலையத்தில் இருவரும் வந்து கையெழுத்து செய்துவிட்டு சென்றிருக்கிறார்கள். நான் சொல்லும் பெண்ணையோ வேறு யாரையோ எதிர்மனுதாரர் திருமணம் செய்து கொள்ளவில்லை என்றாலும் வழக்குக்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிர்மனுதாரர் எந்த ஒரு காலத்திலும் என் மகளுக்கு எந்த ஒரு துன்புறுத்தலும் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த மனுவில் பொய்யான சங்கதிகள் உடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் தகப்பனார் என்ற முறையில் அவர் ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

16. என்னுடைய வாக்குமூலத்தில் எதிர்மனுதாரர்கள் மீது சொல்லியுள்ள பொய் குற்றச்சாட்டுகள் எதுவும் ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்றால் சரியல்ல

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 04.45 p.m.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**